# யூனியன் வங்கி ஊழியர் சங்கம் (தமிழ்நாடு)

AIBEA - AIUBEA உடன் இணைக்கப்பட்டது
சிங்கப்பூர் பிளாசா, 3வது தளம், 164, லிங்கி செட்டி தெரு, சென்னை - 600 001
தொலை பேசி : 044-45000032, 9677048718 மின்அஞ்சல் : ubeutn@gmail.com
இணையதளம் : bankubeutn.in


சுற்றறிக்கை எண்:124:2022 02.09.2022

அன்பார்ந்த தோழர்களே !

## சங்கத்தின் பொன்விழா மாநாடு

நமது சங்கத்தின் 24வது பொன்விழா மாநாடு வரும் நவம்பர் மாதம் 20-21 தேதிகளில் சென்னையில் நடைபெறவுள்ளது என்று ஏற்கனவே சுற்றறிக்கை வாயிலாகத் தோழர்களுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாநாட்டை சிறப்பாக நடத்துவது குறித்து விவாதித்து முடிவுகள் எடுப்பதற்கான உறுப்பினர்களின் சிறப்புக்கூட்டம் கடந்த 26.08.2022 அன்று சென்னையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் அதிக எண்ணிக்கையிலான தோழர்கள் கலந்துகொண்டு மாநாட்டை சிறப்பாக நடத்திடத் தங்கள் மேலான ஆலோசனைகளை வழங்கினர். மாநாட்டை நடத்திட சென்னையிலுள்ள தோழர்களைக் கொண்டு ஒரு வரவேற்புக்குழுவை அமைத்திடவும், நிதி ஆதாரத்தை திரட்டிட ஒரு சிறப்பு மலர் வெளியீட்டுக்குழுவை அமைப்பது என்றும் முடிவு செய்யப்பட்டது.

சிறப்புக்கூட்டத்தில் கலந்துகொண்ட தோழர்களையும், விருப்பம் தெரிவித்த தோழர்களையும் இணைத்து ஒரு வரவேற்புக்குழுவும், சங்கத்தின் நிர்வாகிகளை கொண்ட மலர் வெளியீட்டுக்குழுவும் அமைக்கப்பட்டது. மேலும் விருப்பமுள்ள தோழர்களை வரவேற்புக்குழுவிலும், மலர் வெளியீட்டுக்குழுவிலும் இணைத்துக்கொள்ள அந்தக் குழுக்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டது.

உடனடியாக மலர் வெளியீட்டுக்குழுவிற்காக புதிய கணக்கும் துவக்கப்பட்டது. நமது தோழர்கள், விளம்பரத்திற்கான தொகையை இந்தக் கணக்கில் செலுத்தலாம்.

**"Souvenir Committee - UBEU-TN" கணக்கு எண்: 332601010937328**

விரைவில் சிறப்பு மலரில் வெளியிடுவதற்கான விளம்பரங்களைப் பெறுவதற்கான வேண்டுகோள் கடிதங்கள் கிளைகளுக்கு அனுப்பப்படும். அனைத்து தோழர்களும், தங்களது முழுமையான பங்களிப்பை வழங்கி, மாநாட்டிற்கு தேவையான நிதி ஆதாரத்தை திரட்டிட வேண்டுகிறோம்.

தோழமை வாழ்த்துகளுடன்,

(அ.சிதம்பரம்)
பொதுச் செயலாளர்